கண்டுக்குளி [illegible] நூலகம்

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 30 செவ்வாய்க்கிழமை 15-12-1992 UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 19

# தமிழருக்கு எதிரான முடிவுகளுடன் தெரிவுக்குழுவின் அமர்வுகள் பூர்த்தி

## பெரும்பான்மைச் சிங்களவர் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானம்

கொழும்பு, டிசம்பர் 15

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகள் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இணக்கமான தீர்வு ஒன்றைக் காணாத நிலையில் பூர்த்தியடைந்திருக்கின்றன.

சிங்களவர்கள் தெரிவுக்குழுவில் தமது பெரும்பான்மைப் பலத்தைப் பாவித்து, தமிழர் நலன்களுக்கு எதிரான தீர்வுத் திட்டம் ஒன்றிற்கான தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர்.

கடந்த வருடம் ஆகஸ்டில் அமைக்கப்பட்ட தெரிவுக்குழு நீண்ட 16 மாத காலத்தின் பின்னர் கடந்த வார இறுதியில் தனது அமர்வுகளைப் பூர்த்தி செய்ததாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தெரிவுக்குழுவில் பங்கு பற்றிய அனேகமான தமிழ்க் கட்சிகள் சமஷ்டி அரசமைப்பின் கீழ் வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தின் சுயாட்சி முறையையே வலியுறுத்தி வந்தன.

ஆனால்—

சிங்களக் கட்சிகள் தெரிவுக்குழுவில் தமக்கிருக்கும் அரசுப் பெரும்பான்மையைப் பாவித்து தமிழருக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் எதிரான தீர்வுத் திட்டம் ஒன்றிற்கான தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதாக அறியவருகிறது.

தெரிவுக்குழு [illegible] சார்பாக— ஒரு தலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவில் இணைப்புக்கும் சமஷ்டிக்கும் எதிராக வாக்களிப்பு

கொழும்பு, டிச. 15

இலங்கைக்குச் சமஷ்டி அரசமைப்புக் கூடாது என்றும் — தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு — கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிக்க வேண்டும் என்றும்— நாடாளுமன்றத் தெரிவுக்குழு இரகசிய வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்தது.

இந்த முடிவை ஆதரித்து 42 எம். பிக்களும் எதிர்த்து 8 எம். பிக்களும் வாக்களித்தனர் என்றும் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்று அதிகாலை மோதல்

நேற்று அதிகாலை பண்டத்தரிப்புப் பகுதியில் மோதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

இதேசமயம் —

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை வலி. வடக்கு, வலி. மேற்குப் பகுதிகளில் இருந்து அடிக்கடி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன; துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. தெல்லிப்பளை முதல் மாதகல் வரை உள்ள இராணுவ நிலைகளிலிருந்தே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அளவெட்டி தெற்கு, அளவெட்டி வடக்கு, தொட்டிலடி, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, மற்றும் சுழிபுரம், சாந்தை, வனிப்புலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இரவோடு இரவாக இடம்பெயர்ந்தனர். எனினும் நேற்றுக் காலை நிலைமை சீரடைந்ததை அடுத்து அவர்கள் தத்தமது இடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

(உ-13-28 68)

## வல்வையில் ஷெல் தாக்கு! இளம் பெண் படுகாயம்!!

வல்வெட்டித்துறை, டிச. 15

பலாலி முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் வல்வெட்டித்துறையில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார். இரு கோயில்களும் மற்றும் உடைமைகளும் சேதமடைந்தன.

ஷெல்கள் வல்வை முத்துமாரி அம்மன் ஆலயம் முன்பாகவும் வல்வை சிவன் கோவில் தெற்கு வீதியிலும் விழுந்து வெடித்ததில் ஆலயங்களுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

ஆதிகோவில் பகுதியில் விழுந்த ஷெல்லினால்— மூன்று பிள்ளைகளின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை வவுணதீவில் தொடர்கிறது

கொழும்பு, டிச 15

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு உதவி அரச அதிபர் பிரிவில் ஸ்ரீலங்காப் படைகளின் ''ஜெயசங்கா'' இராணுவ நடவடிக்கை நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்து இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

வவுணதீவில் உள்ள மூன்று இராணுவ முகாம்களில் குவிக்கப்பட்டிருக்கும் விசேட படையினர் கவச வாகனங்கள், பீரங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் சகிதம் இந் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும்—

ஓதியன்மடடாறு, பன்னியறுப்பு [illegible] படுவான்கரை, இலுப்படிச்சேனை, கிளியமடு பன்னிச்சைப்பு ஆகிய கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பில் கைதான தமிழர்; பலரின் நிலை தெரியவில்லை

யாழ்ப்பாணம், டிச. 15

கொழும்பில் கடந்த இவாரங்களில் ஸ்ரீலங்காப் படைகளாலும் பொலிஸாராலும் கைது செய்யப்பட்ட — நூற்றுக்கணக்கான — தமிழர்கள் இப்போது எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியாமல் அவர்களின் உறவினர்கள் பொலிஸ் நிலையங்கள் தோறும் அலைகிறார்கள்.

கொழும்பில் விடுதிகளையும் வீடுகளையும் சுற்றிவளைத்தும், வீதிகளை வழிமறித்தும் தமிழ் இளைஞர்களைக் கைது செய்யும் பொலிஸார், கைது செய்யப்படுவோர் எங்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்படுகிறார்கள் என்பதை உறவினர்களுக்கு அறிவிப்பதில்லை. இதனால் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் அவர்களைத் தேடி பொலிஸ் நிலையங்கள் தோறும் அலைந்து வருகிறார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குப்பிளானில் நேற்றிரவு ஷெல், ஹெலித் தாக்குதல்!

### அறுவர் படுகாயமுற்றனர்

யாழ்ப்பாணம், டிச. 15

குப்பிளான், மயிலங்காடு, பகுதிகளில் நேற்றிரவு 7 மணி முதல் 10.30 மணிவரை விட்டு விட்டு ஷெல் தாக்குதல்களும் ஹெலிக்கொப்டர் தாக்குதலும் இடம்பெற்றன.

குப்பிளான் தெற்கில் ஷெல் தாக்குதலினால் ஒரு வீடு சேதமடைந்தது; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐவர் காயமுற்றனர்; மயிலங்காட்டில் மற்றொருவர் ஷெல்லினால் காயமுற்றார்.

இ. தெய்வநாயகம்பிள்ளை (வயது 55), அவரது பிள்ளைகளான பராசக்தி (வயது 29), ராஜ்குமாரி (வயது 26), ரஞ்சினி (வயது 23) ஆகியோரும் இளையபா செல்வமணி (வயது 46) என்பவரும் குப்பிளான் தெற்கில் காயமுற்ற

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு இப்போது துரோகக் குழுவாகிவிட்டது!

### ஆறு தமிழ்க் கட்சிகள் கூட்டறிக்கை

கொழும்பு, டிச. 15

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு எம்மைக் காட்டிக் கொடுத்த துரோகக் குழுவாக மாறிவிட்டது.

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எவ் உட்பட ஆறு தமிழ்க் கட்சிகள் கொழும்பில் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

இனப்பிரச்சினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சமாதானத் திட்டம் என்பது கேலிக்கூத்து என்றும்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்கள் கரைஒதுங்கின?

தென்மராட்சி, டிச. 15

நேற்று முன்தினம் அதிகாலை ஆலங்கேணி கடற்கரையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரின் சடலங்கள் கரை ஒதுங்கியதாக நேற்று அங்கிருந்து வந்த பயணிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி சேவை தடைப்பட்டது

கிளாலிப் போக்குவரத்து நேற்று நள்ளிரவு இடம்பெறவில்லை என அறியவந்தது;

இரவு 7 மணியளவில் கிளாலிப் பகுதியில் வைத்து பயணிகள் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும்—

இதனையடுத்து கிளாலியிலிருந்து புறப்பட்ட படகுகள் பயணத்தைக் கைவிட்டு கரை திரும்பியதாகவும் அங்கிருந்து [illegible] விரவு தெரிவித்தனர்.

(உ-3)

## தொழில் கடன் வழங்க இலங்கை வங்கி மறுப்பு

### சூழ்நிலை உகந்ததில்லையாம்

யாழ்ப்பாணம், டிச. 15

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் விவசாயம், கைத்தொழில், மீன்பிடி போன்ற தொழில்களுக்கு கடன் வழங்க முடியாது. யாழ்ப்பாணத்தின் தற்போதுள்ள சூழ்நிலையில் இத்தகைய கடனை வழங்க முடியாது என தமது தலைமையகம் அறிவித்துள்ளதாக இலங்கை வங்கி அதிகாரிகள் யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வங்கிகளினால் விவசாயம், கைத்தொழில், மீன்பிடி போன்ற துறைகளுக்கு கடன் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடன் வழங்குவதற்கு உத்தரவாதம் தருமாறு மக்கள்வங்கி நிபந்தனை

யாழ்ப்பாணம், டிச. 15

வங்கியால் வழங்கப்படும் சுயதொழில் முயற்சிக் கடனை திரும்பப் பெற்றுத் தர அரச சார்பற்ற நிறுவனங்கள் உத்தரவாதம் தருமானால் தொழில் முயற்சியாளர்களுக்கு அத்தகைய கடனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மக்கள் வங்கி அறிவித்துள்ளது.

சாப்புறுதி செய்யப்பட்ட தொழில்களுக்கே கடன் வழங்க வேண்டும் என்ற நிபந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

புடவை வியாபாரம் செய்யக்கூடிய கெட்டிக்கார நபர் தேவை. ஒரு மைல் சுற்றாடலில் இருப்பவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும், த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், இல. 21, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(23618)

## இலவச திருமண சேவை

29 வயது, உத்தரம் 1. செவ்வாய் 1. U.K.இல் Computer Hardware தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில் த. விமலா, யாழ்/நாச்சிமார் கோவிலடி.
(23634)

29 வயது பூராடம், செவ்வாய் 12, Computer பயிற்சியுடன் தொழில் புரிபவருக்கு உயர் தரத்தில் மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும். தொடர்பு: ஞாயிறு காலையில் த. விமலா யாழ்/நாச்சிமார், கோவிலடி.
(23635)

## தவறிவிட்டது

கடந்த 08 - 04 - 1992 இல் வரியான் பாதையில் இரவு எனது உடுப்புப் பை ஒன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ச. தியாகராசா, சில்வர் கொம்பனி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(23639)

## உற்சவம்

யாழ்ப்பாணம், டிச. 15
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் நவோத்திர சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். (த)

## நூல் வெளியீடு

பண்டிதர் மு. கந்தையா எழுதிய "திருக்கேதீச்சர பாண்மியம் பொற்பொளிர் காண்டம்" என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

யாழ்ப்பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் வெளியீட்டு விழாவிற்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிக்கின்றார். திரு. ச. விநாயகமூர்த்தி, இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர், கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், கலாநிதி கி. க சிற்றம்பலம், திரு. சு. இராசநாயகம் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவார்கள். (ஏ)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், டிச 15
யாழ். லீக் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இன்று பிற்பகல் 4 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். ஹென்றியின் விளையாட்டுக் கழக அணி மோதும். (உ)

## பொதுக்கூட்டம்

**(திருத்தம்)**

அச்சுவேலி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 20-12 1992 காலை 9-00 மணிக்கு நடைபெறும்.
— செயலாளர்.
(23642)

---

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் ச. ச. நிலைய பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்படும்

## விளையாட்டுப்போட்டிகள்

1. கரப்பந்தாட்டம் (நான்கு பேர் கொண்ட விலகல் முறை)
2. 25 மைல் சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்)
3. 5 மைல் மரதன் ஓட்டம் (ஆண்கள்)

விண்ணப்ப முடிவு திகதி:-
19 - 12 - 92 சனிக்கிழமை

பதிவு செய்யும் இடங்கள்:-
* மணிக்குரல் விளம்பர சேவை யாழ்ப்பாணம்.
* சாந்சிவா மல்ரி ரேட் சென்றர் கல்வியங்காடு.

மேலதிக விபரம் தேவை

வாலையம்மன் ச. ச. நிலையம்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

செயலாளர்
பொன்விழா குழு
(23649)

---


## சிறந்த புரதச்சத்து நிறைந்த சோயா பானத்தை தயாரிக்க வல்லது




# சோயாரீன்

இது கோப்பிபோன்று பாலுடன் பாவிக்கக் கூடியது.

அண்ணாகோப்பிக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணாகோப்பிக் கடை
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(இ/2825)


---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 02-01-1930





மறைவு: 16-11-1992

### திருமதி நடராசா கோணேஸ்வரி
(மண்டைதீவு 6ஆம் வட்டாரம்)

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்த அன்பின் அம்மா! எம்மை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து வளர்த்து. எம் வாழ்வின் வளம்காணும்முன்பு காலமும், காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்துவிட்டதம்மா, அப்பாவின் பிரிவு தாங்காது அல்லல் உறும் வேளை உங்களையும் தன்னுடன் அழைத்துச் சென்று நாங்கள் சிறகொடிந்த நிலையில் தவிக்கின்றோம் அம்மா: உங்கள் இருவரது ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், உற்றார், உறவினர்.

எங்கள் துன்ப நிகழ்வின்போது உதவிகள் புரிந்தோருக்கும் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(23648)

---

# மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் மீது கெடுபிடி!

கொழும்பு, டிச. 15
கொழும்பில் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் பொலிஸாரின் கெடுபிடிக்கு ஆளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் செல்லும் இளைஞர்கள் கூட பொலிஸாரின் தொல்லைக்கு ஆளாகி வருகின்றனர். மோட்டார் சைக்கிள்களை அதிகம் பயன்படுத்தும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள், அரச ஊழியர்கள் போன்றோரே பெரிதும் கெடுபிடிக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —
பொலீஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருப்பதால் பீதியடைந்திருக்கும் கொழும்புத் தமிழர்கள் — குறிப்பாக இளைஞர்கள் — அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே வீட்டை விட்டு வெளியே வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-3)

---

ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 08 — 1943



மறைவு: 27 — 12 — 1991

### திரு. துரைச்சாமி சின்னத்தம்பி
(பிரபல தொழிலதிபர்)

திதி: 16—12—1992

ஆண்டு ஒன்றாகிவிட்ட போதிலும், உங்கள் அன்பு நினைவுகள் நிலைத்திருக்கும்;

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

77, காரைக்காட்டு வேலி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(23650)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்: 10 — 01 — 1912



விண்ணில்: 16 — 11 — 1992

### திருமதி நல்லம்மா மயில்வாகனம்

அன்பின் திருவாய், பண்பின் உறைவிடமாய், பாசவிளக்காய் யாரும் மதிக்க வாழ்ந்திட்ட அன்புத் தெய்வமே! எமது அருமைத் தாயே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எங்குதான் சென்றீர்கள்?

எமது தாயாரின் மரணச்சடங்கில் நேரடியாகவும், கடிதங்கள் மூலமாகவும் தொடர்பு கொண்டு எங்கள் துயரத்தில் பங்கேற்று ஆறுதல் அளித்தவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியினை தெரிவிப்பதோடு, நாளை (16 - 12 - 1992) புதன்கிழமை எமது இல்லத்தில் காலை 10-00 மணி தொடக்கம் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
அம்பிகா ஸ்ரோர்ஸ் (கிளிநொச்சி)
பங்காளர்கள்.

மடத்தடி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(23623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போக்கிடம் இல்லாதார் துரோகப் போக்கு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதில் தெரிவுக் குழு வெற்றிகாண முடியாமற் போனது குறித்து, தமிழ் மக்கள் கவலைப்படவில்லை. ஏனெனில், ஆரம்பத்திலிருந்தே அது வெறும் காலம் கடத்தும் கருவி என்பதையும், கண்துடைப்பு என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

சிங்கள மக்களோ, அல்லது அவர்களின் அரசியல் தலைவர்களோ இந்தத் தோல்வி குறித்து கவலைப்படப் போவதில்லை. அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரையில் தெரிவுக் குழுவின் தோல்வியை நட்டமாக நினைத்துக் கவலைப்படுவதற்குப்பதிலாக லாபமாக எண்ணி மகிழ்ச்சி கொள்வார்கள்.

தெரிவுக் குழுவுக்கு ஏற்பட்ட தோல்வி கொழும்பில் இயங்கி வரும் தமிழ்க் கட்சிகளையே பெரிதும் பாதிக்கப் போகிறது. அவர்கள் தமிழ் மக்களுடன், சொந்த மண்ணில் நிற்காது, சிங்களவர் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டே அரசியல் நடத்துபவர்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்ளும் அவர்களில் பலருக்கு தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள், அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் எதுவுமே தெரியாது. நேரில் கண்டதில்லை; கேட்டதுமில்லை. இந்த இலட்சணத்தில் தான் அவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்கிறார்கள்.

இப்போது நாடாளுமன்றத்தில் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொள்ளும் கட்சிகளில் பலவும் தமிழீழமே தமது இலட்சியம் என்று கூறிக் கொண்டவை. அதன் பொருட்டு ஆயுதப் போராட்டம் நடத்துவதாகக் காட்டிக் கொண்டவை.

ஆனால் அவற்றில் இரண்டு குழுக்கள், தமிழர் தாயகத்தைப் பிரித்து வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் அற்ப சலுகைகளைப் பெறுவதற்கு முன் வந்துள்ளன. சிங்களத் தலைவர்களின் மேசையில் இருந்து விழும் எலும்புத் துண்டுகளை கௌவிக் கொள்ளத் தயாராகிவிட்டன. தம்மால் எட்டிப் பிடிக்க முடியாத சுவையுறு கனியை புளிப்பானது என்று கூற முனைந்து விட்டன.

இந்த இரண்டு குழுக்களும், தம்முடன் கொழும்பில் ஒட்டி உறவாடிய ஏனைய குழுக்களைக் காட்டிக் கொடுக்கத் துணிந்துவிட்டன; கீழே விழும் எலும்புத் துண்டுகளை கௌவினால் அதிகாரம் தமது கைக்கு வரலாம் என்று அவை கனவு காணக்கூடும்.

அவர்கள் யாரையும் காட்டிக் கொடுக்கட்டும். ஆனால் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்வதை அனுமதிக்க முடியாது. தமிழ் மக்களிடம் இருந்து தேர்தலில் பெற்ற ஆணையை (தேர்தல் செல்லுபடியற்றது; பலாத்காரம் நிறைந்தது என்பது இன்னொரு விடயம்) மீறுவதற்கு அனுமதிக்க முடியாது.

குறிப்பாக ரெலோவினர் தமது இயக்கத்தின் ஸ்தாபகர்களான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோருக்கே துரோகம் செய்யப் புறப்பட்டு விட்டனர். தமிழீழப் போரில் ஈடுபட்டதற்காக நீதிமன்றம் அவர்களுக்கு மரண தண்டனை விதித்தது. அப்போது அவர்கள் பகிரங்கமாக வெளியிட்ட விருப்பம் என்ன?

மரணத்தின் பின்னர் தமது கண்கள் பார்வை இழந்த ஈழத் தமிழ் மகனுக்கு வழங்கப்பட வேண்டும். மலரவிருக்கும் தமிழீழத்தைத் தமது கண்கள் பார்க்க வேண்டும் - என்பதேயாகும்.

ரெலோ இப்போது தமிழர் தாயகத்தைப் பிரிக்க இணங்குவது அந்த இருவருக்கும் செய்யும்பெரும் துரோகமாகும். அதற்குப் புளொட்டும் துணை போக உடன்பட்டிருக்கிறது. போக்கிடம் இல்லாதவரின் இயலாமை இங்கே தெரிகிறது!

## வழக்கறிஞர் சங்கம் முடிவு!

கொழும்பு, டிச. 15

போதைப் பொருள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குற்றஞ் சாட்டப்படுபவர்கள் சார்பாக ஆஜராகுவதில்லை என்று அம்பாந்தோட்டை வழக்கறிஞர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது. (த-எ)

## சி. பி. ஐ. விசாரிக்கும்!

புதுடில்லி, டிச. 15

அயோத்தி அசம்பாவிதங்கள் பற்றி விசாரணை நடத்தும் பொறுப்பை மத்திய அரசு மத்திய புலனாய்வுப் பணியகத்திடம் (சி. பி. ஐ.) ஒப்படைத்துள்ளது. (த-எ)

உள்ளூராட்சி ஓய்வூதியம் பெறுபவர்களின்

# இரண்டு மாத வவுச்சர்கள் இதுவரை கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், டிச. 15

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சேவை ஓய்வூதியர்களுக்கு கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான பென்ஷன் வவுச்சர்கள் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்களது பென்ஷன் வவுச்சர்கள் கொழும்பிலிருந்து நேரடியாகத் தபால் மூலமே உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். ஆனால் கடந்த இரு மாதங்களாக கப்பல் மூலம் தபால் பொதிகள் எடுத்துவரப்படுவதில் ஏற்பட்டுள்ள சீர்குலைவு காரணமாக இவர்களுக்கு இதுவரை ஓய்வூதிய வவுச்சர்கள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் பருத்தித்துறைக்கு வந்த 'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட 68 தபால் பொதிகளில் பென்சன் வவுச்சர்கள் இருக்கவில்லை. அதன் பின்னர் தற்சமயம் வந்துள்ள 'குமாரி' கப்பலிலும் தபால் பொதிகள் எடுத்துவரப்படவில்லை.

ஏனைய ஓய்வூதியம் பெறுபவர்களின் மேற்படி வவுச்சர்கள் வந்து சேர்ந்துள்ள நிலையில், உள்ளூராட்சி ஓய்வூதியம் பெறுபவர்கள் மட்டும் தபால் பொதிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்; அவர்களின் சிரமத்தைப் போக்க தபால் பகுதியும், உள்ளூராட்சித் திணைக்களமும் கவனம் காட்டுமா என்று ஓய்வூதியர்கள் உதயனிடம் கவலை தெரிவித்தனர். (த-5)

## வட - கிழக்கில் அமைதி ஏற்பட்டதும் பிரதேச செயலகங்கள் இயங்குமாம்!

### அமைச்சர் பெஸ்டஸ் சொல்கிறார்

கொழும்பு, டிச. 15

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைதி ஏற்பட்டதும் அங்குள்ள பிரதேச செயலகங்கள் செயல்பட ஆரம்பிக்கும்.

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் திருகோணமலை இடம் பெயர் சேவையில் கலந்து கொண்டு பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அரச அதிபர்கள் அடுத்த ஆண்டில் இருந்து மாவட்ட செயலாளர்கள் ஆக செயல்படுவர். பிரதேச செயலாளர்களின் பணிகளை இவர்கள் மேற்கொள்வார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (த-எ)

## தபாற்சேவை சீரழிவு: மக்கள் தொடர்பு பாதிப்பு

யாழ்ப்பாணம், டிச. 15

யாழ். மாவட்டத்துக்குரிய கப்பல் மூலமான தபால் விநியோகம் பெருமளவில் சீரழிந்துள்ளது. அதனால் மக்களின் வெளித்தொடர்பு மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கொழும்பு அதிகாரிகளுடன் பேசுவதற்காக பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எம். எம். சேதுகாவலர் இரண்டொரு தினங்களில் கொழும்பு செல்லவுள்ளார்.

கொழும்பில் இருந்து வெளியூர்த் தபாற் பொதிகள் கப்பல் மூலம் எடுத்துவரப்படுவதில் கடந்த இரு மாதங்களாக பெரும் சீர் குலைவு ஏற்பட்டுள்ளது.

சென்ற மாதம் பருத்தித்துறைக்கு வந்த 'குமண' கப்பலில் மிகக் குறைந்த எண்ணிக்கையான — சிறுத்தெட்டுத் தபாற் பொதிகள் மட்டுமே — எடுத்துவரப்பட்டிருந்தன.

அதன் பின்னர் தற்சமயம் பருத்தித்துறைக்கு வந்துள்ள 'குமாரி' கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்து வரப்படவில்லை.

இந்நிலையில் வெளியூர்த் தபால்களை எதிர்பார்த்திருந்த மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். அரச திணைக்களங்களின் செயற்பாடுகளிலும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை நீக்கி தபால் விநியோகம் சீராக நடைபெற என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்திடம் கேட்டபோது—

ஏற்கனவே தாம் இது தொடர்பாகவும், தபால்கள் இழிக்கப்பட்டு வருவது பற்றியும் தபால் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும்—

இன்னும் இரண்டொரு தினங்களில் கொழும்பு சென்று நேரில் இது பற்றிப் பேசவிருப்பதாகவும் தெரிவித்தார். (த-5)

இடம்பெயர்ந்து சுழிபுரத்தில் தங்கியுள்ளோரை

## தென்மராட்சியில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் கைகூடவில்லை!

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மற்றும் சுழிபுரம் ஐக்கிய சங்கப் பாடசாலை ஆகிய முகாம்களில் தங்கியுள்ள சுமார் 800 குடும்பங்களை தென்மராட்சியில் அமைக்கப்பட்டுள்ள குடிமனைகளில் குடியமர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கைகூடவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுப்புலம், பண்டுவெட்டை, குடாக்கனை ஆகிய கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மேற்படி குடும்பங்கள் தென்மராட்சிக்கு செல்வதற்கு மறுப்புத் தெரிவித்து வருவதைத் தொடர்ந்தே இந்நிலை எழுந்துள்ளது.

இப்பாடசாலை முகாம்கள் நிரம்பி வழிவதாலும் — தற்போதைய மழைக்காலத்தின் போது தொற்றுநோய்கள் தீவிரமாகப் பரவும் ஆபத்து இருப்பதாலும் — தொழுநோய் அறிகுறிகள் காணப்பட்ட காட்டுப்புல பகுதியைச் சேர்ந்த மக்கள் மிக நெருக்கமாக சாந்தோட்டம் அற்ற இடங்களில் இருப்பதால் இந்நோய் மேலும் பரவ வாய்ப்பு இருப்பதாலும் இம்மக்களை இடம் மாற்றுவதற்கு வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதேவேளை —

தமது சொந்தக் கிராமங்களை நோக்கி அடிக்கடி மாதகல், பலாலி இராணுவ முகாம்களில் இருந்து ஏவப்படும் ஷெல்கள் விழுந்து வெடிப்பதால் தாம் அப்பகுதியில் குடியிருக்க முடியாது என்றும் —

தாக்குதல் அற்ற நேரங்களில் தமது வீடுகளுக்குச் சென்றுவர, இரண்டு பாடசாலைகளிலும் தங்கியிருப்பதே வசதி என்றும் — சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (த-13)

## பொத்துவில் நோக்கி தாழமுக்கம்

தற்போது வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள தாழமுக்கம் காரணமாக வடக்கு — கிழக்குப் பகுதிகள் இன்று காற்று மற்றும் இடி முழக்கத்துடன் கூடிய பலத்த மழை பெய்யக் கூடும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்தது.

கிழக்கு கடலுக்கு அப்பால் உருவாகியுள்ள தாழமுக்கம் இன்று பொத்துவிலுக்கு அருகே கரையைக் கடக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது. (உ-6)

## லண்டனில் பள்ளிவாசல் மீது ஞாயிறன்று எரிகுண்டு வீச்சு!

கிழக்கு லண்டன் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது கடந்த ஞாயிறு காலை எரிகுண்டு வீசப்பட்டது. இதனால் பள்ளிவாசல் கதவு எரிந்து போனது.

இதேசமயம், கடந்த சனிக்கிழமை லண்டனின் தென் மேற்குப் பகுதியில் உள்ள இந்துக் கோவில் ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, பங்களாதேஷில் இந்து மக்கள் மற்றும் இந்து ஆலயங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் தூண்டுகோலாகச் செயல்பட்டதாகக் கூறப்படும் ஜமாத் இஸ்லாமி என்ற தீவிரவாத அமைப்பைத் தடைசெய்வது குறித்து அந்த நாட்டின் அரசும் எதிர்க்கட்சிகளும் ஆலோசித்து வருகின்றன. (ஓ-எ-8)

## இந்தியக் கடற்படைக்கு 12 ஏவுகணைக் கப்பல்கள்

புதுடில்லி, டிச. 15

இந்தியக் கடற்படைக்கென பன்னிரண்டு ஏவுகணைக் கப்பல்கள் கட்டப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இவற்றில் நான்கு ஏவுகணைக் கப்பல்கள் இந்தியக் கடற்படையினரால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நான்கு ஏவுகணைக் கப்பல்களில் இரண்டு கோவா கப்பல் கட்டும் தளத்திலும் எஞ்சிய இரண்டும் கல்கத்தா கப்பல் கட்டும் தளத்திலும் நிர்மாணிக்கப்பட்டன.

இந்த வரிசையில் நான்காவது ஏவுகணைக் கப்பலான ஐ. என். எஸ். விபூதி கடந்த வாரம் இந்திய கடற்படையால் சேவைக்கு விடப்பட்டது.

இத்தகவல்களை கோவா கப்பல்கட்டும் தளப்பொறுப்பதிகாரி கொமடோர் ராஜ் வெங்கடேஷ் வெளியிட்டார்.

### குப்பிளானில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்.

மயிலங்காட்டில் நாராந்திவம் பாஸ்கரன் (28 வயது) காயமுற்றார்.

இவர்கள் ஆறு பேரும் நேற்று நள்ளிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (உ-8-13)

### தமிழ் அகதிகளுக்கு ஜப்பான் உதவி

கொழும்பு, டிச 15

தமிழ்நாட்டில் இருந்து தாயகம்திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நிவாரணப் பணிகளுக்கென ஜப்பான் அரசாங்கம் ஒன்றரைக்கோடி ரூபா பணத்தை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது. இந்தப்பணம் அகதிகளுக்கான ஐ.நா. ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

## நாவலர் பெருமை

நலம்பொலி பெருந்திரு நல்லைமா நகரினன்
குலம்பொலி கந்தவேள் குமாரனாயுதித்தோன்
பத்தமதாற்றும் மல்பெருந் தவத்தினன்
நீதியிற் பெருகிய மேதகு நிதியினன்
சோதிவாக் குசைநுதிக் கூர்மைகொள் மதியினன்
தருக்கவேதாந்தப் பெருக்க முற்றுணர்ந்தோன்
சயம்பெறு சைவ சபைக்குபரதிபதி
அக்குமாமணி நீறணி திருமேனியன்
மிக்குயர் செந்தமிழ் வேதபாராயணன்
இவமற கமலத் திளழ்ந்திடு இவாகரன்
பக்கமைப்செலசம் புல்லுமோக்கவம்
தமிழ்கடல் குடித்த பெருங்கும்ப முனிவன்
ஆரணம் புகலும் பூரண புராணன்
பேறு பெரிதடைந்த ஆறுமுகநாவலன்
தலைசேர் தமிழ்க்குத் தனிமுதல்
சம்பு பூசா நியமமேற்றிய நயிட்டிகன்
சித்தாந்த தர்க்க வேதாந்த நிலையம்
பிரபல சாஸ்திரமப் பொக்கிஷம்
வேதவியாஸ விளங்க விசித்திரன்
சிவநேயச் செல்வர் திருவுடைத் தொண்டர்
தமிழினைப் புதுக்கமைந்த தத்துவப் புதல்வன்
அமிழ்தினுமினிய சொல்லோன் அழகிய நாவலன்
அருள்விரவு பரவுபுகழ் ஆறுமுகநாவலன்
சுத்த சைவசித்தாந்தப் பெருஞ்செல்வன்
ஐந்தெழுத்தும் பொருளாக் கொண்டவப்போன்;

(நாவலர் குருபூசை தினத்தை ஒட்டி இது பிரசுரிக்கப்படுகிறது.)

நன்றி: வீரகேசரி செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பர் காசிப்பிள்ளை முருகேசு (T. K. M.) (தம்பு)

காரைநகர் களபூமி வளுப்போடையைச் சேர்ந்த காசிப்பிள்ளை முருகேசு அவர்கள் கடந்த 6-12-92 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், தெய்வானையின் அன்புக் கணவரும், சற்குணராசா (சுவிஸ்), பத்மா, ரகுபதிராசா, மரகி, நிர்மலைராசா, யோகராசா, திருச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஞானசேகரியின் (பதுளை) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஐயாத்துரை, T. K. சுந்தசாமி, T. K. நடராசா, ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

களபூமி வீதி,
வாடுக்கோட்டை. (23653)

## திருமதி சதாசிவம் பாலாமணி

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சதாசிவம் பாலாமணி 14-12-92இல் சிவபதமடைந்து விட்டார். இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற (Local Goverment Secretarial Service) சதாசிவத்தின் அன்பு மனைவியாரும், காலஞ்சென்ற ருக்குமணி, காலஞ்சென்ற குணசிங்கம் (நீர்வேலி), கனகசிங்கம் (கோப்பாய்) ஆகியோரின் சகோதரியும், மலர்மாது (வவுனியா), கிருஷ்ணதாஸ் (சட்ட வைத்திய கலாநிதி - யாழ் போதனா வைத்தியசாலை), குலமாது (கொழும்பு - முன்னாள் யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை), சபிலமாது (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம் (வவுனியா), ஜெகதீசன் (கொழும்பு), சிவேகசுந்தரா, குணசிங்கம் (கனடா) ஆகியோரின் மாமியாரும், முகிலினி, நிலாந்தினி, லசந்தினி, சஜந் (U. K.), சாயந்திரி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) சிற்பரன், நித்திலா, சிவநூஜன் (கனடா), சிவஜன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியை இன்று (15-12-92) பிற்பகல் 2-30 மணியளவில் 181, அரசடி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
Dr. கிருஷ்ணதாஸ்
(மகன்)

181, அரசடி வீதி,
நல்லூர் (23646)

## கனகசபை பரிமளகாந்தன்

சரசாலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற (இளைப்பாறிய அதிபர்) பொன்னையா கனகசபை, திருமதி செல்வநாயகி ஆகியோரின் அன்பு மகனும், கமலநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வரெழு முள்ளைச் சேர்ந்த ஓவசியர் வைத்திலிங்கம் தம்பதிகளின் மருமகனும், ஸ்ரீகாந்தன், தேவகாந்தன், பத்மகாந்தன், சிவகாமசுந்தரி, பத்மாகினி, சோதிநாயகி, சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரருமாகிய பரிமளகாந்தன் 13-12-1992 அன்று காலை சிவபதமடைந்தார். அன்று மாலை 4-00 மணியளவில் அன்னாரின் சமக்கிரியைகள் நடைபெற்றன.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், உதவிபுரிந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
க. ஸ்ரீகாந்தன்,
(சகோதரன்),
(இளைப்பாறிய ஆசிரியர்).

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (23645)

## செல்வி வாசுகி மனோகரா

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்வி வாசுகி மனோகரா 13-12-92இல் கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற ஆனந்தசபாபதிமனோகரா-மனோகரா யோகம்மா ஆகியோரின் அன்பு மகளும், சுதாகரன் (வர்த்தக வங்கி), ஜெயகரன் (ஜேர்மனி), ஜீவாகரன், உமாகரன் (கனடா), நாகநந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாவதி, சாந்தமதி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-12-92) கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
கே. குகசாந்தன்

(23651)

## திருமதி இராசம்மா ஆறுமுகம்

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி இராசம்மா ஆறுமுகம் 14-12-1992 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. ஆறுமுகம் பத்தரின் அன்பு மனைவியாவார்.

இவர் காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற தமோதரம்பிள்ளை, பொன்னம்மா, சின்னம்மா, அன்னம்மா, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் சகோதரியும், சிறீதரன் (ஹொலண்ட்) கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரி, பாலவாயா ஆகியோரின் அன்பு மாமியாருமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல: 626/11 K K S வீதி, நாச்சிமார் கோவிலடியில் உள்ள சகோதரியின் இல்லத்தில் இன்று (15-12-1992) முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. பாலகிருஷ்ணன்
(மகன்)

626/11 K K S. றோட்,
யாழ்ப்பாணம். (5049)

## இன்று

யாழ்ப்பாணம், டிச: 15

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பயிற்சித் திட்டத்தின் கீழ் தையல் பயிற்சியை முடித்துக் கொண்ட 30 இளம் யுவதிகளின் தையல் கண்காட்சி இன்று காலை 9.30 மணிக்கு பலாசயூர் இளைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 15

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் ஆறுமுகநாவலர் குருபூசை இன்று மாலை 4 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவிலில் நடைபெறும். இவ்விழாவில் குருபூசை, திருமுறை பாராயணம், "நல்லூரில் மீண்டும் நாவலர்" என்ற தலைப்பில் கவிஞர் ஹரிதாஸின் சொற்பொழிவு ஆகியவை இடம்பெறும். (உ)

## சடலங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

கடந்த 6 ஆம் திகதி கிளாலிக்கடலில் பயணம் செய்த போது படையினரின் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்த — காரைநகரைச் சேர்ந்த காசிப்பிள்ளை முருகேசுவினதும் கிளிநொச்சியில் வசிக்கும் அவரது மருமகனினதும் சடலங்கள் ஆலங்கேணியில் ஒன்றும் கிளாலியில் ஒன்றுமாக கரை ஒதுங்கின என்று மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3-117)

## உத்தரவாதம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனையினால் புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் விவசாயம் கைத்தொழில், மீன்பிடி போன்ற தொழில்களுக்கு கடன் வழங்க முடியாதிருப்பதாகவும் —

காப்புறுதி இல்லாமல் ரூபா 2 லட்சம் வரையான கடனை வழங்க அனுமதி வழங்குமாறு மக்கள் வங்கியின் இயக்குநர் சபை இலங்கை மத்திய வங்கியிடம் கேட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்தில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் வைத்து மேற்படி தகவல்களை மக்கள் வங்கி அதிகாரிகள் யாழ். அரச அதிபரிடம் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## தொழில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பத்தாம் திகதி யாழ். செயலகத்தில் நடந்தது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றினர்.

மேற்படி கலந்துரையாடலின்போதே இலங்கை வங்கி அதிகாரிகள் யாழ் அரச அதிபரிடம் முன்கண்ட தகவலைத் தெரிவித்தனர். (அ-5)

## தமிழருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்சமாக — முடிவு எடுக்கப்பட்டிருப்பது தமிழ்க் கட்சிகளிடையே பெரும் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தமிழருக்கு ஏற்புடைய தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க முடியாத நிலையில் தெரிவுக் குழுவின் அமர்வுகள் பூர்த்தியடைந்திருப்பது —

தமிழர்களுக்குத் தனிநாடு கோரிப் போராடும் விடுதலைப் புலிகளின் நோக்கத்தை நியாயப்படுத்தியிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன. (உ-3)

## வல்வையில் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாயான திருமதி விஜயசேகரம் — வசந்தி (வயது 24) என்பவர் காலில் படுகாயமடைந்தார். இவர் வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் அங்கிருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இந்த ஷெல் குண்டுகளினால் ஆதிகோவில் பகுதியில் சில வீடுகள் பெரும் சேதமடைந்தன. மீனவர்களின் ... தொழில் உபகரணங்களும் சேதமடைந்தன. (உ-3)

## கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

வெளிநாட்டில் வேலை பார்க்கும் பலர், தமது உறவினர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டதும் அங்கிருந்து கொழும்புக்கு வந்து தங்கி, தங்களின் உறவினர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## தெரிவுக்குழு. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானத்திட்டம் என்ற பெயரில் சில தீர்வுகளை பெரும்பான்மை சிங்கள இனம் தம்மீது திணிப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் மேலும் தெரிவித்துள்ளன.

சிங்கள அரசியல் கட்சிகளுக்கு தமிழர் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய அரசியல் உறுதி இல்லை என்றும் அவை தெரிவித்துள்ளன. (உ-எ)


இன்னிசை ரசிகர்களுக்கு
கிறிஸ்மஸ் புத்தாண்டு விருந்தாக
சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் வழங்கும்
யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களான
"யாழ். ரமணன் - கணேஸ்"
இன்னிசை நெறியாள்கையில்
"ராஜன்ஸ்"
இசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும்
இன்னிசை மழை
வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டபம்
27-12-1992 மாலை 5-00 மணி
விசேட ஒலி, ஒளி அமைப்பாளர்கள்: நித்தி, மனோ
29-3-92இல் நடைபெற இருந்த நிகழ்ச்சியே தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்போடப்பட்டு 27-12-92 இல் நடைபெற உள்ளது.
ரிக்கட் கிடைக்கும் இடங்கள்:
★ 233 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
★ ச(f)வாரீஸ் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
(சி/3994)



யாழ். வட்ட லியோ கழகம்
நடத்தும்
எஸ். வி. முருகேசு ஸ்தாபனத்தின்
வெற்றிக் கேடயத்துக்கான லீக் முறையிலான
உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி - 1992
பங்குபற்றும் கழகங்களாவன:
★ அரியாலை ஐக்கிய வி. க. ★ பொற்பதி வி. க.
★ சென். அன்ரனீஸ் வி. க. ★ சென். றோக்ஸ் வி. க.
★ பாடும் மீன் வி. க ★ சென். நீக்கலஸ் வி. க.
ஆரம்பம்: 15 — 12 — 1992 பி. ப 4-00 மணி
இடம்: சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- யாழ் வட்ட லியோ கழகம்.
(23644)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகம்மா

சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்திய கலாநிதி தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவி நாகம்மா 13-12-92இல் புத்தளத்தில் காலமானார் என்பதனை வருத்தத்துடன் அறியத்தருகிறேன்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புத்தளத்தில் நடந்தேறின. இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. சற்குணநாகன்

சுழிபுரம் மத்தி. (சி/3995)

## சின்னப்பு செல்லையா

(சிவலிங்கப்புளியடி ஒளி, ஒலி அமைப்பாளர்)

யாழ். கே. கே. எஸ் வீதி, சிவலிங்கப்புளியடியைச் சேர்ந்த சின்னப்பு செல்லையா 14-12-92 (நேற்று) காலமானார். அன்னார் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கணேசரெட்ணத்தின் அன்புத் தந்தையும், மங்கலிகாராணியின் அன்பு மாமனும், சோபனா, தியாவி, இந்துஜா, நிருசன், விதுசன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி. ப 2 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
செ. கணேசரெட்ணம்
(மகன்)

464 கே. கே. எஸ் வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம். (23652)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org